

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.2.2025) நேரு இளையோர் மையம் மூலமாக தமிழ்நாட்டில் கலாச்சார, பண்பாட்டு பரிமாற்ற நிகழ்ச்சிக்காக வருகை தந்துள்ள ஜார்கண்ட், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சந்தித்து தமிழ்நாட்டில் தங்கள் அனுபவங்கள் குறித்து கலந்துரையாடி குழுப்புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் நேரு இளையோர் மைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10 மற்றும் 12ஆம் வகுப்பில் பயிலும் மெல்லக்கற்கும் மாணாக்கர்களும் தேர்வில் எளிதில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் எமது நிதிப் பங்களிப்புடன் மிகவும் எளிமையாக புரிந்து கொண்டு பயிலும் வகையில் வடிவமைக்கப்பட்ட சிறப்பு கையேட்டினை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாணவ – மாணவிகளுக்கு வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, அரு. வடிவேல் மற்றும் தலைமை ஆசிரியர், ஆசிரிய, ஆசிரியைகள், கல்வித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## குழந்தைகளின் தனித்திறமையைக் கண்டறிந்து

# ஊக்குவிப்பதே ‘திராவிட மாடல்’ அரசின் நோக்கம்!

### சென்னையில் – அரசு இல்ல குழந்தைகள் விருது வழங்கும் விழாவில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு!

**சென்னை, பிப் 14–**

**சென்னையில் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை சார்பில், அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் இல்ல குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் 2025–ன் நிறைவு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.**

இதில் கலந்து கொண்டு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாவட்டம் - மண்டல அளவிலான போட்டிகளில் வென்று, மாநில அளவில் வெற்றிகளைக் குவித்த வீரர் - வீராங்கனையருக்குப் பரிசுகளை வழங்கினார்.

அப்போது அரசு இல்லங்களில் வாழ்கின்ற குழந்தைகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட - அவர்கள் தம் தனித்திறமைகள் மூலம் சாதனையாளர்களாக உருவெடுத்திட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு என்றும் துணை நிற்கும் என்று உரையாற்றினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

இந்த விளையாட்டு அரங்கில், பல்வேறு சமயங்களில், பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளேன். தேசிய போட்டிகள், சர்வதேச போட்டிகள் கூட இந்த அரங்கில் நடந்துள்ளது. ஆனால் மற்ற நிகழ்ச்சிகளில் இல்லாதவகையில், இந்த நிகழ்ச்சியில் இவ்வளவு மாணவ மாணவிகள் எழுச்சியோடு, உற்சாகத்தோடு, சிரித்த முகத்தோடு, ஆரவாரத்தோடு கலந்து கொண்டிருக்கிறீர்கள். இவ்வளவு எழுச்சியான மகிழ்ச்சியான நிகழ்ச்சி இந்த விளையாட்டு மைதானத்தில் பார்க்க வாய்ப்பு அளித்து இருக்கிறீர்கள்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பாக அரசு மற்றும் நிதி உதவி பெறுகின்ற இல்லங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகள் மட்டும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**தாய்-தந்தையாக நமது தலைவர்!**

தமிழ்நாடு முழுவதும் இருந்து 183 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் குழந்தைகளின் தனித்திறமையைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நம் திராவிட மாடல் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த கலை நிகழ்ச்சிப் போட்டிகளை ஏற்பாடு செய்து இருக்கிறார்.

உங்களின் கலைநிகழ்ச்சியையும், விளையாட்டு திறமையையும் நான் ஏற்கனவே நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் உங்களையெல்லாம் நேரில் சந்திக்கும் பொழுது, உண்மையிலேயே மிகப் பெரிய அளவில் மகிழ்ச்சியும், உற்சாகமும், பிரமிப்பும் ஏற்படுகிறது.

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டு குழந்தைகள் ஊட்டச்சத்துடன் வளர வேண்டும் என்று, சத்துணவு தந்தார். மதிய உணவிற்கு முட்டை கொடுத்தார். இன்றைக்கு நம் முதலமைச்சர் அவர்கள், குழந்தைகள் நலன் கருதி, முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.



உங்களின் வீடுகளுக்கும் இன்றைக்கு சத்தான உணவு வகைகள், தேவையான பொருட்களை நம் அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. ஒரு தந்தை, தாய் இடத்திலிருந்து நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அத்தனை குழந்தைகளையும் போற்றிப் பாதுகாத்து வருகிறார்.

அதனால்தான் இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள எந்த மாவட்டத்திற்கு சென்றாலும், குழந்தைகளைச் சந்திக்கும் பொழுது ஒவ்வொரு குழந்தையும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை உரிமையோடு, உற்சாகத்தோடு, அன்போடு `அப்பா, அப்பா' என்று அழைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**இதுதான் உண்மையான சமூக நீதி!**

அந்த அளவிற்கு குழந்தைகள், மாணவர்கள் நலனிற்காக எந்தெந்த வகைகளில் எல்லாம் திட்டங்களை செயல்படுத்த முடியுமோ, அந்தந்த வடிவங்களில் எல்லாம் நம் திராவிட மாடல் அரசு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள் இன்னும் வளர வேண்டும்.

உங்கள் திறமைகள் எல்லாம் வெளியே தெரிய வேண்டும், உங்களின் திறமைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்று இந்த கலை நிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டு போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன. எல்லோருக்கும் சமமான வாய்ப்பு என்பதைத் தாண்டி, யார் யாருக்கு என்னென்ன தேவை என்பதை உணர்ந்து, அதை எப்படிக் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்பதை உணர்ந்து செயல்படுவது தான் உண்மையான சமூக நீதி.

அந்த வகையில்தான், நம் திராவிட மாடல் முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார். அதற்கு இங்கு வந்திருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உண்மையிலேயே சமூக நலத் துறைக்கு எங்கள் விளையாட்டுத் துறை சார்பாக நாங்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஏனென்றால் நாங்கள் விளையாட்டுத்துறைக்கு திறமையாளர்களை கண்டறிய வேண்டும் என்று ஏராளமான முயற்சிகளை எடுத்து வருகிறோம். உதாரணத்திற்கு `கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம்', முதலமைச்சர் விளையாட்டுப் போட்டிகள், `தமிழ்நாடு சாம்பியன் ஃபவுண்டேஷன்' போன்ற திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த முன்னெடுப்புகளின் மூலம் பல்லாயிரக்கணக்கான இளம் விளையாட்டு வீரர்களை நாங்கள் அடையாளம் கண்டு வருகிறோம். இன்னும் கூடுதலான விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதற்கு சமூக நலத்துறை நடத்துகின்ற இதுபோன்ற நிகழ்ச்சிகள் நிச்சயம் எங்களுக்குப் பேருதவியாக இருக்கும்.

**என்றும் உறுதுணையாக இருப்பேன்!**

அதேபோல் தனித் திறமை உள்ள மாணவர்களை அடையாளம் காண பள்ளிக்கல்வித்துறை சார்பாக, `கலைத் திருவிழா' போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்த நிகழ்ச்சிக்குத் தொடர்ந்து அன்பளிப்பு செய்கின்ற ஐ.ஓ.சி.எல். நிறுவனம், அதேபோல் நாளந்தாவே பவுண்டேஷனுக்கும் இந்த நேரத்தில் பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து இது போன்ற நல்ல நிகழ்ச்சிகளுக்கு, உங்களின் ஆதரவு அரசுக்கு என்றுமே தேவை.

சமூக நலத்துறையானது விளையாட்டு, கலைத்துறை சார்பான நிகழ்ச்சிகளை ஒன்றாக நடத்தியுள்ளது. எனவே மீண்டும் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சி மூலம் ஒரே இடத்தில் இவ்வளவு மாணவர்களை சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அமைச்சர் கீதாஜீவன் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து கொள்கிறேன்.

**உங்களுக்குத் துணை நிற்பேன்!**

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளவர்கள் அடுத்தடுத்து விளையாட்டுத் துறையில் சாதிக்க நமது விளையாட்டு மேம்பாட்டுத்துறை நிச்சயம் உங்களுக்கு என்றைக்கும் உறுதுணையாக இருக்கும். அதே போல் கலைத்துறையில் சாதித்துள்ள தம்பிகள், தங்கைகள் அவர்களின் தனித்திறமைக்கு ஏற்ப வாழ்வில் உயரங்களை தொடுவதற்கும், ஒரு அண்ணனாக இருந்து என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்பேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாபெரும் விழாவில் வெற்றிபெற்று பரிசுகளை வென்ற அத்தனை பேருக்கும் மீண்டும் எனது வாழ்த்துக்களை தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமைச்சர்கள் கீதா ஜீவன், சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்தொகைத் துறையின் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஐ.ஏ.எஸ்., மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ஸ்ரீதர், பரிதி இளம் சுருதி, சிறப்பு செயலாக்கத் துறையின் இணை இயக்குநர் கஸ்தூரி, பகுதி கழகச் செயலாளர்கள் சோ. வேலு, சுதாகர், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனின் முதன்மைச் செயலாளர் கவின், நாளந்தாவே அறக்கட்டளை நிறுவனர் ஸ்ரீராம் ஆகியோர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 11.02.2025 அன்று பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான வானவில் மன்ற போட்டிகள் மற்றும் அறிவியல் கண்காட்சியினை பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர் மா. ஆர்த்தி, கூடுதல் இயக்குநர் திருமதி எஸ். உமா, நாட்டு நல பணி திட்ட இணை இயக்குநர் திருமதி கா. சுசிகலா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## பள்ளிக் கல்வித் துறை சார்பில்

# மாநில அளவிலான வானவில் மன்றப் போட்டிகள் மற்றும் அறிவியல் கண்காட்சி!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்துப் பார்வையிட்டார்!

*சென்னை, பிப்.14-*

*முதலமைச்சர் அவர்களால் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை மாணவர்கள் தாமாக பரிசோதனை செய்து கற்றலை மேம்படுத்துவதற்காக திருச்சியில் 2022 நவம்பர் 28 அன்று வானவில் மன்றம் நடமாடும் அறிவியல் ஆய்வகம் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள 13,236 அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணாக்கர்கள் பயன் பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

**திட்டத்தின் பயன்கள்:**

*தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் அறிவியல் மற்றும் கணிதம் குறித்த ஒரே மாதிரியான செயல்முறைக் கல்வி கிடைக்கிறது.*

*அடிப்படை அறிவியல் மற்றும் கணித கோட்பாடுகள் மீதான புரிதல் என்பது செயல் முறைக் கல்வி மூலமாக மட்டும் அமையும் அதற்கான வாய்ப்பு வானவில் மன்ற வகுப்புகள் மூலமாக உறுதியாக அமைகிறது.*

*ஆர்வத்தை தூண்டி உரையாடல்கள் நடத்துவதன் மூலம் ஒவ்வொரு மாணவனின் தனிப்பட்ட அறிவியல் மற்றும் கணித பாடப் பிரிவின் மீதான ஆர்வத்தைப் புரிந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கிறது.*

*அறிவியல் மற்றும் கணித பாடத்தில் அடிப்படைப் புரிதலோடு கூடிய செயல்முறைக் கல்வி தேர்வுகளின் மீதான பயத்தை மாணவர்களிடமிருந்து விலக்கி ஆர்வத்துடன் பள்ளித்தேர்வுகளிலும் போட்டித்தேர்வு களிலும் ஊக்கப்படுத்தி பங்கேற்கச் செய்ய வாய்ப்பு கிடைக்கும்.*

**பயனாளர்கள்**

*தமிழ்நாட்டின் அனைத்து அரசுப்பள்ளிகளில் 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளைச் சார்ந்த மாணவர்கள்.*

*வானவில் மன்ற போட்டிகள் ஒன்றியம், மாவட்ட அளவில் நடத்தப்பட்டு தற்போது மாநில அளவில் மாணவர்களுக்கான கண்காட்சி நடத்தப்பட உள்ளது. மாநில அளவிலான போட்டிகளில் மாவட்டத்திற்கு 4 மாணவர்கள் வீதம் 152 மாணவர்களும், மாவட்டத்திற்கு 1 ஆசிரியர் வீதம் 38 ஆசிரியர்களும், வானவில் மன்ற பொறுப்பாளர்கள் மற்றும் கல்வி அலுவலர்கள் என 30 நபர்களும் கலந்து கொள்ள உள்ளனர்.*

*இம்மாநில அளவிலான போட்டிகளில் சிறப்பிடம் பெறும் 25 மாணவர்கள் வெளிநாடு கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர். இதுவரை வானவில் மன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற 43 மாணவர்கள் ஜப்பான், ஹாங்காங், மலேசியா போன்ற நாடுகளுக்கு வெளிநாட்டு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.*

*இந்த ஆண்டு வானவில் மன்ற செயல்பாடுகளுக்கு ரூபாய் 11.69 கோடி ஒதுக்கீடு செய்யப்படுள்ளது.*

*தேசிய அளவிலான அறிவியல் கருத்தரங்கில் வெற்றி பெற்ற மாணவிக்கு பாராட்டு சான்றிதழ் வழங்குதல்*

*மாநில அளவிலான அறிவியல் கருத்தரங்கம் சேலம் மாவட்டத்தில் நடத்தப்பட்டது, இதில் மாவட்ட அளவில் வெற்றி பெற்ற 47 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற மாநில அளவில் முதல் இடம்பிடித்த S. G. ரட்சனா 9 ஆம் வகுப்பு பாரதிய வித்யாமந்தீர், இலஞ்சி, தென்காசி மாவட்டம் என்ற மாணவி மும்பையில் நடைபெற்ற தேசிய அளவிலான அறிவியல் கருத்தரங்கில் கலந்து கொண்டு தேசிய அளவில் வெற்றி பெற்றுள்ளார்.*

*தென்னிந்திய அறிவியல் கண்காட்சி- 2025 சிறப்பிடம் பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்குதல்*

*மாநில அளவில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற மாநில அளவிலான அறிவியல் கண்காட்சியில் பங்கேற்றவர்களில் கீழ்க்கண்ட வகைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

*தனிப்பட்டவகை (15 கண்காட்சிகள்)*

*குழுவகை(10 கண்காட்சிகள்)*

*ஆசிரியர்வகை (10 கண்காட்சிகள்)*

*இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள் காட்சிப்பொருட்களுடன் 21.01.2025 முதல் 25.01.2025 வரை புதுச்சேரியில் நடைபெற்ற தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் கலந்து கொண்டனர். இவர்களுள் சிறப்பிடம் பெற்ற31 மாணவர்கள் மற்றும் 5 ஆசிரியர்களுக்கு 13.02.2025 அன்று பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.*

*இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநர் மருத்துவர். மா.ஆர்த்தி, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி கூடுதல் மாநில திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா, நாட்டு நலப்பணி திட்ட இணை இயக்குநர் திருமதி.கா.சசிகலா, சென்னை மாவட்டம், முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். அ.புகழேந்தி, வானவில் மன்றம், மாநில ஆலோசகர் முனைவர். என். மாதவன் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.*